(ஏழாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

இல. 1 (8).]

# பாராளுமன்றம்

## 1 ஆம் ஒழுங்குப் புத்தகத்துக்கான அனுபந்தம்

## 2010, ஓகத்து 20, வெள்ளிக்கிழமை வெளியிடப்பட்டது

## 2010 செத்தெம்பர் 07, செவ்வாய்க்கிழமை

## பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

*

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன மத அலுவல்கள் அமைச்சரும்,— ஒதுக்கீட்டுச் சட்டத்தின் கீழான தீர்மானம்,— 2008 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8ஆம் பிரிவினால், நிதி, திட்டமிடல் அமைச்சருக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன், பதில் நிதி, திட்டமிடல் அமைச்சரால் செய்யப்பட்ட கட்டளை இல.27 இல் குறித்துரைக்கப்பட்ட கட்டளை அங்கீகரிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

### 2008 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழான கட்டளை இல. 27

2008 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவினால் எனக்கு அளிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம் பதில் நிதி, திட்டமிடல் அமைச்சர் சரத் அமுனுகம ஆகிய நான் அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன் இக்கட்டளை மூலம் அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் 21302 ஆம் இலக்க, செயற்பாட்டு விடயம் "அச்சிடல், பிரசாரம் மற்றும் புத்தகங்கள் விற்பனை முற்பணக் கணக்கு—கல்வி வெளியீட்டுத் திணைக்களம்" என்பதற்கெதிராக குறித்துரைக்கப்பட்ட எல்லைகளை மாற்றுகின்றேன்:-

(i) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் II இல் குறித்துரைக்கப்பட்ட செலவின் உச்ச எல்லை — மீளாய்வு செய்யப்படவில்லை.

(ii) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் III இல் குறித்துரைக்கப்பட்ட பெறுகைகளின் ஆகக் குறைந்த எல்லை — ரூபா 2,400,000,000 இலிருந்து ரூபா 2,162,000,000 வரை.

(iii) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் IV இல் குறித்துரைக்கப்பட்ட பற்று மீதியின் உச்ச எல்லை — மீளாய்வு செய்யப்படவில்லை.

(iv) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் V இல் குறித்துரைக்கப்பட்ட பொறுப்புக்களின் உச்ச எல்லை — ரூபா 100,000,000 இலிருந்து ரூபா 96,000,000 வரை.

(இக்கட்டளை 2009.12.31 ஆம் திகதி வரை மட்டுமே செல்லுபடியாகும்.)

*ஒப்பம் : கலாநிதி சரத் அமுனுகம*
பதில் நிதி, திட்டமிடல் அமைச்சர்.

கொழும்பு 01,
2010.07.03

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

*

தேசிய தொழிற்கற்கைகள் நிறுவகச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.

## 2010, செத்தெம்பர் 08, புதன்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

0237/ '10

கௌரவ சஜித் பிரேமதாச,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) அம்பாந்தோட்டை மாவட்டத்தில் தங்காலை வலயக் கல்விக் காரியலயத்திற் குட்பட்ட தங்காலை கோட்டக் கல்விக் காரியாலயத்தினால் பரிபாலிக்கப்படும் அரசாங்கப் பாடசாலைளின் எண்ணிக்கை என்னவென்பதையும்,

(ii) அப்பாடசாலைகளின் பெயர்கள் யாவையென்பதையும்,

(iii) மேற்படி பாடசாலைகளில் தற்போது மூடப்பட்டுள்ள அல்லது மூடுவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ள பாடசாலைகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்,

(iv) அப்பாடசாலைகளின் பெயர்கள் யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) இக்கோட்டத்திற்குரிய பாடசாலைகளில் மிகையான ஆசிரியர்கள் உள்ளனரா என்பதையும்,

(ii) அவ்வாறான பாடசாலைகளின் பெயர்கள் யாவையென்பதையும்,

(iii) ஆசிரியர்கள் பற்றாக்குறை நிலவும் பாடசாலைகளின் பெயர்கள் யாவை என்பதையும்,

(iv) பற்றாக்குறை நிலவுவது எந்தப் பாடங்களுக்கு என்பதையும்,

(v) இவ்வாறு ஆசிரியர் பற்றாக்குறை நிலவும் பாடசாலைகளுக்கு ஆசிரியர்களைப் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்,

(vi) அவ்வாறாயின் அது எவ்வளவு காலத்தினுள் நடைபெறுமென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0265/ '10

கௌரவ றஊப் ஹக்கீம்,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) கடுகண்ணாவ, குருகுந்தல, 18 ஆம் இலக்க முகவரியில் வசிக்கும் திரு. எஸ்.எம்.எம். ஹலீம் 1994 ஒற்றோபர் மாதம் 03 ஆம் திகதியிலிருந்து க/ அல்-மனார், மாவனெல்ல சாஹிரா மற்றும் மாவனெல்ல மயுரபாத ஆகிய தேசிய பாடசாலைகளில் (கஷ்டப் பிரதேச, கஷ்டப் பிரதேசமல்லாத) திருப்திகரமாக கடமையாற்றிய ஒரு வணிகப் பட்டதாரி ஆசிரியர் என்பதையும்,

(ii) திரு. ஹலீம் தற்போது கடயைமையாற்றும் மாவனெல்ல சாஹிரா தேசிய பாடசாலையில் கடமைக்கு சமுகமளிப்பதற்கு, அதே பாடசாலை அதிபர் தடையேற்படுத்துகிறாரென்பதையும்,

(iii) மேற்படி அதிபர் வெளி நபர்களை ஈடுபடுத்தி பாடசாலை வளவினுள் திரு. ஹலீமைத் தாக்கி உயிருக்கு அச்சுறுத்தல் விடுத்துள்ளதால், அந்தப் பாடசாலையில் இவருக்கு சுதந்திரமாக பணியாற்ற முடியாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளதென்பதையும்,

(iv) இதனால், இவர் மாவனெல்ல மயுரபாத தேசிய பாடசாலைக்கு இடமாற்றம் ஒன்றைக் கோரியுள்ளாரென்பதையும்,

(v) அந்தக் கோரிக்கையை வேண்டுமென்றே சிபாரிசு செய்யாமல் மேற்படி அதிபர் தொடர்ந்தும் திரு. ஹலீமை உளரீதியாக பாதிப்படையச் செய்கிறாரென்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) குறித்த அதிபரின் நடவடிக்கைகள் தொடர்பாக அமைச்சு மட்டத்தில் விசாரணையொன்று நடத்தப்படுமாவென்பதையும்,

(ii) திரு. ஹலீமுக்கு, மாவெனல்ல மயுரபாத தேசிய பாடசாலைக்கு இடமாற்றம் ஒன்றைப் பெற்றுக்கொடுக்க தாமதமின்றி நடடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், என்?

0299/ '10

கௌரவ ஹரின் பர்னாந்து,— அரச வளங்கள், தொழில்முயற்சி அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) அமைச்சரவை பத்திரத்தின் மூலம் பெற்றுக்கொண்ட அனுமதியுடன் மக்கள் பெருந்தோட்ட அபிவிருத்தி சபைக்குரிய கொழும்பு 02, வொக்சோல் ஒழுங்கையில் இல. 53/75 எனும் இடத்தில் அமைந்துள்ள 100 பேர்ச்சஸ் வரையிலான காணித் துண்டு 300 மில்லியனுக்கு விற்கப்பட்டுள்ளதென்பதையும்,

(ii) இந்தக் காணியை விற்பதற்கு அமைச்சரவை அனுமதியானது மக்கள் பெருந்தோட்ட அபிவிருத்தி சபைக்குரிய ஊழியர்கள் மற்றும் உத்தியோகத்தர் களின் சேமலாப நிதிய நிலுவைத் தொகையையும் ஊழியர் சேமலாப நிதியத்துக்கு செலுத்த வேண்டிய தொகையையும் மற்றும் பணிக் கொடையையும் செலுத்துவதற்காக பெற்றுக் கொள்ளப்பட்டது என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) அந்த சேமலாப நிதியை செலுத்தி முடிப்பதற்குத் தேவைப்படும் பணம் எவ்வளவு என்பதையும்,

(ii) மேற்கூறிய 300 மில்லியன் ரூபாவிலிருந்து சேமலாப நிதியாக செலுத்தப்பட்ட தொகை எவ்வளவு என்பதையும்,

(iii) சேமலாப நிதியாக தொடர்ந்தும் செலுத்தவுள்ள தொகை எவ்வளவென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) மக்கள் பெருந்தோட்ட அபிவிருத்திச் சபை கடந்த வருடம் நட்டத்தில் இயங்கியதா என்பதையும்,

(ii) அவ்வாறு நட்டத்தல் இயங்கியமைக்கான காரணம் என்ன என்பதையும்,

(iii) அவ்வாறெனின், அந்த வருடத்தின் நட்டம் மற்றும் இவ் வருடம் மே மாதம் வரை இலாபம் அல்லது நட்டம் எவ்வளவு என்பதையும்,

(iv) நிறுவனம் நட்டத்தில் இயங்கியதும் ஊழியர் சேமலாப நிதி செலுத்தப்படாமல் இருப்பதற்குக் காரணமாக அமைந்ததா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0316/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,—

(அ) (i) இந்திய இலங்கை சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் (FTA) கைச்சாத்திடப்பட்ட திகதியினையும்,

(ii) கடந்த 10 வருடங்களின் இந்தியா மற்றும் இலங்கைக்கான ஏற்றுமதி மற்றும் இறக்குமதியின் வர்த்தக புள்ளி விபரங்களையும்,

(iii) CEPA ஒப்பந்தத்தின் தற்போதைய நிலையினையும்,

(iv) CEPA ஒப்பந்தம் பற்றிய அரசாங்கத்தின் நிலைப்பாட்டினையும்,

(v) CEPA ஒப்பந்தம் கைச்சாத்திடப்படப் போகின்றதா என்பதையும்,

(vi) CEPA ஒப்பந்தம் தொடர்பாக இந்தியாவுடன் பேச்சுவார்த்தை நடத்தி வரும் நபர்களின் பெயர்களையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல். ஏன்?

0349/ '10

கௌரவ தயாசிறி ஜயசேகர,— பொருளாதார அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) 2010 அய்பா விருது வழங்கும் விழாவுக்காக இலங்கை சுற்றுலாச் சபையினூடாக ஏற்கப்பட்ட செலவு எவ்வளவென்பதையும்,

(ii) தனியார் நிறுவனங்களினால் இந்த விழாவிற்காக சுற்றுலாச் சபைக்கு வழங்கப்பட்ட முழுத்தொகை எவ்வளவென்பதையும்,

(iii) அந்நிறுவனங்களின் பெயர்களையும் ஒவ்வொரு நிறுவனமும் வழங்கிய நிதி தனித்தனியாக எவ்வளவென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) இந்த விழாவில் கலந்துகொள்ள வருகைதருவதற்கு அனுமதி வழங்கப்பட்ட நடிகர், நடிகைகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்,

(ii) அவர்களின் பெயர்கள் யாவை என்பதையும்,

(iii) அவர்களில் இலங்கைக்கு வருகை தந்தவர்களின் எண்ணிக்கை மற்றும் வருகை தந்தவர்களின் பெயர்கள் யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு முன்வைப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

0366/ '10

கௌரவ அஜித் பி. பெரேரா,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) உலக சுகாதார அமைப்பின் தரங்களுக்கு அமைய மருத்துவர்களுக்கும் மக்களுக்கும் இடையில் காணப்பட வேண்டிய குறைந்தமட்ட விகிதாசாரம் யாது என்பதையும்,

(ii) சுகாதார அமைச்சு ஏற்றுக்கொள்கின்ற தரங்களுக்கு அமைய இலங்கையில் மருத்துவர்களுக்கும் மக்களுக்கும் இடையில் காணப்படவேண்டிய குறைந்தமட்ட விகிதாசாரம் யாது என்பதையும்,

(iii) தற்போது, இலங்கையில் மருத்துவர்களுக்கும் மக்களுக்கும் இடையிலான விகிதாசாரம் எவ்வளவு என்பதையும்,

(iv) மத்திய அரசாங்கத்தின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள வைத்தியசாலைகளில் பணிபுரியும் மருத்துவர்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்,

(v) மாகாண சபைகளின் கீழ் உள்ள வைத்தியசாலைகளில் பணிபுரியும் மருத்துவர்களின் எண்ணிக்கை வேறாக எவ்வளவு என்பதையும்

அவர் இச்சபைக்கு சமர்ப்பிப்பாரா?

(ஆ) (i) இலங்கைப் பல்கலைக்கழகங்களிலிருந்து வெளியேறும் மருத்துவர்களை அரசாங்க சேவைக்கு ஆட்சேர்ப்பதை நிறுத்துவதற்கு அல்லது மட்டுப்படுத்து வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதா என்பதையும்,

(ii) அவ்வாறாயின், அதற்கான காரணங்கள் யாவை என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0409/ '10

கௌரவ விக்டர் அன்ரனி,— மின்வலு, எரிசக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) பல வருடங்களாக நிர்மாணிப்புப் பணிகள் தாமதமடைந்திருந்த மேல் கொத்மலை மின் நிலையத்தின் நிர்மாணிப்புப் பணிகள் எப்போது ஆரம்பிக்கப்பட்டதென்பதையும்,

(ii) இதன் மூலம் தேசிய மின்வலு முறைமைக்குச் சேர்ப்பதற்கு எதிர்பார்க்கப்படும் மெகாவொற்களின் அளவு எவ்வளவென்பதையும்,

(iii) இதற்காக செலவிடப்படும் மொத்தப் பணத் தொகை எவ்வளவென்பதையும்,

(iv) மேற்படி மின் நிலையத்தின் நிர்மாணிப்புப் பணிகள் தாமதிக்கப்பட்டமையின் காரணமாக நாட்டுக்கு ஏற்பட்ட பொருளாதார ரீதியான நட்டம் எவ்வளவு என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா ?

(ஆ) இன்றேல், ஏன்?

0238/ '10

கௌரவ சஜித் பிரேமதாச, — கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) அம்பாந்தோட்டை மாவட்டத்தில் அம்பாந்தோட்டை வலயக் கல்விக் காரியாலயத்திற்குரிய அம்பலாந்தோட்டை கோட்டக் கல்விக் காரியாலயத்தினால் நிருவகிக்கப்படும் அரசாங்கப் பாடசாலைகளில் உட்கட்டமைப்பு வசதிகளுக்கும், பொதுவான தேவைகளுக்கும் பற்றாக்குறை நிலவுகிறதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) இப்பாடசாலை முறைமையில் மின்சார வசதியற்ற பாடசாலைகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்,

(ii) அப் பாடசாலைகளின் பெயர்கள் யாவையென்பதையும்,

(iii) மேற்படி பாடசாலை முறைமையில் மின்சார வசதியற்ற ஆசிரியர் விடுதிகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்,

(iv) அவற்றிற்குரிய பாடசாலைகளின் பெயர்கள் யாவையென்பதையும்,

(v) மரத்தளபாடங்களுக்கான தேவை காணப்படும் பாடசாலைகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்,

(vi) அத்தேவைகள் யாவையென்பதையும்,

(vii) விஞ்ஞான கூடங்கள் மற்றும் நூலகங்கள் அற்ற பாடசாலைகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்,

(viii) அப் பாடசாலைகளின் பெயர்கள் யாவையென்பதையும்,

அவர் இச்சபைக்குச் சமர்ப்பிப்பாரா?

(இ) (i) மேற்படி தேவைகளைப் பூர்த்திசெய்யத் தேவையான நிதியை அப்பாடசாலை களுக்கு ஒதுக்க நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்,

(ii) அவ்வாறாயின், அது எவ்வளவு காலத்தினுள் நடைபெறுமென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல் ஏன்?

0320/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— பெற்றோலியக் கைத்தொழில்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) இலங்கையில் எண்ணெய் இருப்பதற்கான வாய்ப்புகள் எந்தளவில் உள்ளன என்பதையும்,

(ii) எண்ணெய் ஆய்வுடன் தொடர்புடைய அகழ்வுப் பணிகள் ஆரம்பிக்கப் படுவதற்கான காலவரையறையையும்,

(iii) அகழ்வுப் பணிகள் ஒப்படைக்கப்பட்டுள்ள கம்பனிகள் / நாடுகளையும்,

(iv) மேற்படி தரப்பினர்கள் விலைமனுக்கோரல் முறைமூலமாகவா அல்லது பேரம்பேசுதல் மூலமாகவா தெரிவுசெய்யப்பட்டனர் என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) எண்ணெய் இருக்குமென ஊகிக்கப்படும் பகுதிகளை அவற்றின் வரைபடங்களுடனும்,

(ii) எண்ணெய் மூலமாக கிடைக்குமென எதிர்பார்க்கப்படும் வருமானம் மத்திய அரசிற்கா அல்லது மாகாண அரசிற்கா சொந்தம் என்பதையும்

அவர் தொவிவிப்பாரா?

(இ) இன்றேல். ஏன்?

0365/ '10

கௌரவ தயாசிறி ஜயசேகர,— அரச வளங்கள், தொழில் முயற்சி அபிவருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) இலங்கை பீங்கான் கூட்டுத்தாபனத்தின் கீழ் உள்ள ஓடு மற்றும் செங்கல் கைத்தொழிற்சாலைகளின் எண்ணிக்கை யாது என்பதையும்,

(ii) மேற்படி ஒவ்வொரு தொழிற்சாலையிலும் பணிபுரியும் ஊழியர்களின் எண்ணிக்கை வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்,

(iii) பிங்கிரிய ஓடு மற்றும் செங்கல் கைத்தொழிற்சாலையில் பணிபுரியும் ஊழியர் களுக்கு இற்றைவரை ஊழியர் சேமலாப நிதி வரவு வைக்கப்பட்டுள்ளதா என்பதையும்,

(iv) அக்கைத்தொழிற்சாலையில் பணிபுரிந்து ஓய்வுபெற்ற ஊழியர்களுக்கு ஊழியர் சேமலாப நிதி வழங்கப்பட்டுள்ளதா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) 2007 ஆம் ஆண்டில் அதிகரிக்கப்பட்ட அனைத்து வாழ்க்கைச் சுட்டெண் கொடுப்பனவும் இற்றைவரை முழுமையாக வழங்கப்பட்டுள்ளதா என்பதையும்,

(ii) இன்றேல், மேற்படி கொடுப்பனவு எப்போது வழங்கப்படும் என்பதையும்,

(iii) நியாயமான ஓர் நஷ்டஈட்டுக் கொடுப்பனவு முறைக்கேற்ப சேவையிலிருந்து நீங்குவதற்கு அவர்களுக்கு வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுக்கப்படுமா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

0367/ ' 10

கௌரவ அஜித் பி. பெரேரா,— நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) பாணந்துறை, 'கேத்துமதி' மகளிர் மருத்துவமனை மற்றும் நீதிமன்ற வளாகத்துக்குச் செல்லும் ஸ்ரீ மகா வீதி இற்றைக்கு இரண்டு வருடங்களாக மோசமான முறையில் உடைந்துள்ளதென்பதையும்,

(ii) மேற்படி வீதியை திருத்தும் பணியானது முன்னுரிமை கொடுக்கப்பட வேண்டியதொரு விடயமாகும் என்பதையும்

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) (i) அவ்வாறெனில், மேற்படி வீதியைத் திருத்தும் பணிகள் தொடங்கப்படும் மற்றும் நிறைவு செய்ய எதிர்பார்க்கும் திகதிகள் யாவையென்பதையும்,

(ii) மேற்படி வீதியை திருத்தும் பணிகள் விரைவில் ஆரம்பிக்கப்படாத பட்சத்தில் அதற்கான காரணம் யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0239/ ' 10

கௌரவ சஜித் பிரேமதாச, — கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) அம்பாந்தோட்டை மாவட்டத்தில் அம்பாந்தோட்டை வலயக் கல்விக் காரியாலயத்திற்குரிய சூரியவெவ கோட்டக் கல்விக் காரியாலயத்தினால் நிருவகிக்கப்படும் அரசாங்கப் பாடசாலைகளில் உட்கட்டமைப்பு வசதிகளுக்கும், பொதுவான தேவைகளுக்கும் பற்றாக்குறை நிலவுகிறதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) இப்பாடசாலை முறைமையில் மின்சார வசதியற்ற பாடசாலைகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்,

(ii) அப் பாடசாலைகளின் பெயர்கள் யாவையென்பதையும்,

(iii) மேற்படி பாடசாலை முறைமையில் மின்சார வசதியற்ற ஆசிரியர் விடுதிகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்,

(iv) அவற்றிற்குரிய பாடசாலைகளின் பெயர்கள் யாவையென்பதையும்,

(v) மரத்தளபாடங்களுக்கான தேவை காணப்படும் பாடசாலைகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்,

(vi) அத்தேவைகள் யாவையென்பதையும்,

(vii) விஞ்ஞான கூடங்கள் மற்றும் நூலகங்கள் அற்ற பாடசாலைகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்,

(viii) அப் பாடசாலைகளின் பெயர்கள் யாவையென்பதையும்

அவர் இச்சபைக்குச் சமர்ப்பிப்பாரா?

(இ) (i) மேற்படி தேவைகளைப் பூர்த்திசெய்யத் தேவையான நிதியை அப்பாடசாலை களுக்கு ஒதுக்க நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்,

(ii) அவ்வாறாயின், அது எவ்வளவு காலத்தினுள் நடைபெறுமென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல் ஏன்?

0324/ ‘10

கெரவ ரவி கருணாநாயக்க,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,—

(அ) (i) “மத்தட்ட தித்த” நிகழ்ச்சித் திட்டத்தில் சிகரட் பாவனையை இல்லாதொழித்தல் உள்ளடக்கப்பட்டிருக்கின்றதா என்பதையும்,

(ii) கடந்த ஐந்து வருடங்களில் இலங்கையில் சிகரட் மற்றும் பீ(B)டி ஆகியவற்றின் பாவனையை வருடாவாரியாகவும்.,

(iii) கடந்த ஆறு வருடங்களாக உள்ளூரில் உற்பத்தி செய்யப்பட்ட சிகரட்டுகள் மற்றும் பீடி ஆகியவற்றின் தொகையை வருடவாரியாகவும்,

(iv) கடந்த ஆறு வருடங்களில் இந்நாட்டிற்கு இறக்குமதி செய்யப்பட்ட சிகரட்டுகளின் தொகையையும்,

(v) கடந்த ஆறு வருடங்களாக சிகரட்டுகள், பீடி ஆகியவற்றின் உள்ளூர் உற்பத்தி மற்றும் இறக்குமதி மீது விதிக்கப்பட்ட வரிகள் மூலம் பெறப்பட்ட வருமானத்தை வருடவாரியாகவும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல். ஏன்?

0368/ ’10

கௌரவ அஜித் பி. பெரேரா,— விளையாட்டுத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) ஸ்ரீ லங்கா கிரிக்கெட் நிறுவனமானது இலங்கையில் ஊழலில் மூன்றாவது இடத்தைப் பிடித்துள்ளதாக கூறியதை அவர் ஏற்றுக்கொள்கின்றாரா?

(ஆ) (i) அவ்வாறெனில், அவ்வாறு ஊழல் இடம்பெற்றுள்ளதாக குற்றச்சாட்டுக்களை முன்வைப்பதற்கு அடிப்படையாகக் கொண்ட மூலாதாரம் யாதென்பதையும்,

(ii) ஸ்ரீ லங்கா கிரிக்கெட் நிறுவனத்தின் இடம்பெற்றுள்ளதாகக் கூறப்படும் ஊழல்கள் யாவையென்பதையும்,

(iii) மேற்படி ஊழல்களுக்கு பொறுப்புக் கூற வேண்டிய ஆட்களின் பெயர்கள் மற்றும் இவர்களின் பதவிகள் யாவையென்பதையும்,

(iv) மேற்படி ஊழல்களுடன் தொடர்புபட்ட நபர்களுக்கு எதிராகக் குற்ற விசாரணைகள் தொடங்கப்பட்டுள்ளதா என்பதையும்,

(v) அவ்வாறெனில், அது எந்தெந்த நபர்களுக்கு எதிராக என்பதையும்,

(vi) அவ்வாறின்றேல், அதற்காரன காரணங்கள் யாவையென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) ஊழல் குற்றச்சாட்டுகளுக:கு ஏற்புடையதாக ஸ்ரீ லங்கா கிரிக்கெட் நிறுவனத்தைச் சேர்ந்த எத்தனை உத்தியோகத்தர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதென்பதையும்,

(ii) அவ்வாறெனில், மேற்படி உத்தியோகத்தர்களின் பெயர்கள் யாவையென்பதையும்,

(iii) அவ்வாறு ஒழுக்காற்று நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை எனில் அதற்கான காரணங்கள் யாவையென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0386/ '10

கௌரவ தயாசிறி ஜயசேகர,— மின்வலு, எரிசக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) மேல் கொத்மலை கருத்திட்டத்திற்கான புதிய மதிப்பீட்டுத் தொகை யாதென்பதையும்,

(ii) இத்தொகை கடனாக அல்லது நன்கொடையாகப் பெற்றுக்கொள்ளப்படுமா என்பதையும்,

(iii) இக்கடன் அல்லது நன்கொடைத் தொகையை வழங்கும் நிறுவனங்கள் யாவையென்பதையும்,

(iv) இத்தொகை கடனாகப் பெறப்படின் இதைச் செலுத்தி முடிக்க வேண்டிய கால எல்லை யாதென்பதையும்,

(v) இதற்கெனச் செலுத்தவேண்டிய வருடாந்த வட்டி வீதம் யாதென்பதையும்,

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) இக்கருத்திட்டம் எப்போது முடிவடையும் என்பதையும்,

(ii) இக்கருத்திட்டத்திற்கான சுற்றாடல் மதிப்பீட்டு அறிக்கை பெறப்பட்டுள்ளதா என்பதையும்,

(iii) அவ்வாறாயின் அதை இச்சபையில் சமர்ப்பிப்பாரா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

---

## 2010, செத்தெம்பர் 09, வியாழக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

0240/ ' 10

கௌரவ சஜித் பிரேமதாச, — கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) அம்பாந்தோட்டை மாவட்டத்தில் அம்பாந்தோட்டை வலயக் கல்விக் காரியாலயத்திற்குரிய அம்பாந்தோட்டை கோட்டக் கல்விக் காரியாலயத்தினால் நிருவகிக்கப்படும் அரசாங்கப் பாடசாலைகளில் உட்கட்டமைப்பு வசதிகளுக்கும், பொதுவான தேவைகளுக்கும் பற்றாக்குறை நிலவுகிறதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) இப்பாடசாலை முறைமையில் மின்சார வசதியற்ற பாடசாலைகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்,

(ii) அப் பாடசாலைகளின் பெயர்கள் யாவையென்பதையும்,

(iii) மேற்படி பாடசாலை முறைமையில் மின்சார வசதியற்ற ஆசிரியர் விடுதிகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்,

(iv) அவற்றிற்குரிய பாடசாலைகளின் பெயர்கள் யாவையென்பதையும்,

(v) மரத்தளபாடங்களுக்கான தேவை காணப்படும் பாடசாலைகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்,

(vi) அத்தேவைகள் யாவையென்பதையும்,

(vii) விஞ்ஞான கூடங்கள் மற்றும் நூலகங்கள் அற்ற பாடசாலைகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்,

(viii)அப் பாடசாலைகளின் பெயர்கள் யாவையென்பதையும்

அவர் இச்சபைக்குச் சமர்ப்பிப்பாரா?

(இ) (i) மேற்படி தேவைகளைப் பூர்த்திசெய்யத் தேவையான நிதியை அப்பாடசாலை களுக்கு ஒதுக்க நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்,

(ii) அவ்வாறாயின், அது எவ்வளவு காலத்தினுள் நடைபெறுமென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0318/ '10

கெரவ ரவி கருணாநாயக்க,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,—

(அ) (i) கடந்த 5 வருடங்களில் இந்தியாவுடனும், சீனாவுடனும் அரசாங்கத்தாலும், மாகாண சபைகளாலும் அல்லது ஏதாவது உள்ளூராட்சி சபைகளாலும் கைச்சாத்திடப்பட்ட எல்லா ஒப்பந்தங்களினதும் பெயர்களையும்,

(ii) அடுத்த வருடத்திற்குள் மேற்சொல்லப்பட்ட நாடுகளுடன் செய்துகொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ள ஏதாவது ஒப்பந்தங்களின் பெயர்களையும்,

(iii) மேலே (i) இல் தரப்பட்ட ஒப்பந்தங்களின் மொத்த கிரயம் என்னவென்பதையும்,

(iv) அக்கிரயத்தை செலுத்துவதற்கு எவ்வாறு வருமானம் சம்பாதிக்கப்படுகிறது என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) அத்தகைய ஒப்பந்தங்கள் கேள்விப்பத்திர செயன்முறைகள் அல்லது பேரம் பேசுதலையடுத்து செய்துகொள்ளப்பட்டதா என்பதனையும்,

(ii) கேள்விப்பத்திரங்கள் கோரப்பட்டதாயின், கேள்விப்பத்திரங்களின் எண்ணிக்கை களையும் அவற்றில் கூறப்பட்ட தொகைகளையும்,

(iii) பேரம் பேசுதல் அடிப்படையிலாயின், உள்ளூர் பங்காளர்களின் பெயர்களையும்,

(iv) தரவுக் கட்டணமாக முகவர்களுக்குச் செலுத்தப்பட்ட தொகையையும்

அவர் தொவிவிப்பாரா?

(இ) இன்றேல். ஏன்?

0369/ '10

கௌரவ அஜித் பீ. பெரேரா,— நீதி அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) 2006, 2007, 2008, 2009 அத்துடன் 2010 ஆம் ஆண்டுகளில் நடாத்தப்பட்ட சட்டக் கல்லூரி அனுமதிப் பரீட்சையில், இலங்கை சட்டக் கல்லூரிக்கு அனுமதிக்கப்பட்ட மாணவர்களின் மொத்த எண்ணிக்கை தனித் தனியாக எவ்வளவு என்பதையும்,

(ii) மேற்படி ஒவ்வொரு ஆண்டிலும் அனுமதிக்கப்பட்ட திகதியன்று, 35 வயதை விஞ்சிய மாணவர்களின் எண்ணிக்கை தனித்தனியாக எவ்வளவென்பதையும்,

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) திறந்த பல்கலைக் கழகத்தில் சட்டமானிப் பட்டம் பெற்று 2006, 2007, 2008, 2009 அத்துடன் 2010 ஆம் ஆண்டுகளில் சட்டக் கல்லூரியின் இறுதியாண்டு மாணவர்களாக பதிவு செய்யப்பட்ட மொத்த மாணவர்களின் எண்ணிக்கை தனித்தனியாக எவ்வளவென்பதையும்,

(ii) மேற்படி ஒவ்வொரு ஆண்டிலும் அனுமதிக்கப்பட்ட திகதியன்று, 35 வயதை விஞ்சிய மாணவர்களின் எண்ணிக்கை தனித்தனியாக எவ்வளவென்பதையும்,

(iii) அங்கீகரிக்கப்பட்ட வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களில் பட்டதாரிகளில் 2006, 2007, 2008, 2009 அத்துடன் 2010 ஆம் ஆண்டுகளில் சட்டக்கல்லூரியின் முதலாமாண்டு மாணவர்களாக பதிவுசெய்யப்பட்ட மொத்த மாணவர்களின் எண்ணிக்கை தனித்தனியாக எவ்வளவென்பதையும்,

(iv) மேற்படி ஒவ்வொரு ஆண்டிலும் அனுமதிக்கப்பட்ட திகதியன்று, 35 வயதை விஞ்சிய மாணவர்களின் எண்ணிக்கை தனித்தனியாக எவ்வளவென்பதையும்,

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

0387/ ‘10

கௌரவ தயாசிறி ஜயசேகர,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) கடந்த ஆறு வருட காலப் பகுதியிலில் ஆஸ்பத்திரிகளிலிருந்த அகற்றப்பட்ட தரத்தில் குறைந்த மருந்து வகைகளின் அளவு எவ்வளவென்பதையும்,

(ii) இவ்வாறு அகற்றப்பட்ட மருந்து வகைகளின் பெறுமதி எவ்வளவென்பதையும்,

(iii) இந்த மருந்து வகைகளை இறக்குமதி செய்வதற்கான அனுமதி யாரால் வழங்கப்பட்டுள்ளதென்பதையும்,

(iv) இந்த மருந்து வகைகளை அழிப்பதற்கு அரசாங்கத்தினால் பணம் செலவிடப்பட்டுள்ளதா என்பதையும்,

(v) ஆமெனில், அத்தொகை எவ்வளவென்பதையும்,

(vi) தரத்தில் குறைந்த மருந்து வகைகளை இறக்குமதி செய்ததன் மூலம் ஒட்டுமொத்தமாக அரசுக்கு ஏற்பட்ட நட்டம் எவ்வளவென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

0411/ ‘10

கௌரவ ரீ. ரஞ்சித் த சொய்சா,— அரச வளங்கள், தொழில்முயற்சி அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான கண்டி ஹந்தான தோட்டத்திலிருந்து 45 ஏக்கர் 02 ரூட் 16 பர்சஸ் நிலப் பரப்பினை சட்டபூர்வமற்ற காணிப் பரிமாற்றமொன்றாக ஷாமினி கிரிஎல்ல மற்றும் பிலிப் ஜயவர்த்தன என்பவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) இக் காணியானது சட்ட ரீதியாக காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவினால் சுவீகரிக்கப்பட்டதன் பின்னர் மட்டுமே வழங்கப்பட முடியுமெனினும், இந்த நடவடிக்கை முறையைப் பின்பற்றாது முன்னாள் அமைச்சரும், மக்கள் தோட்ட அபிவிருத்தி சபையின் தலைவரும் மேற்படி காணியை சட்டரீதியற்ற வகையில் வழங்கியுள்ளனர் என்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா?

(இ) (i) சட்ட ரீதியாக வழங்கப்படவில்லையெனின், இக்காணியை பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சினால் மீள சுவீகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்,

(ii) சட்டரீதியற்ற இக்காணிக் கொடுக்கல் வாங்கலுக்குப் பொறுப்புக்கூற வேண்டியது யார் என்பதையும்,

(iii) இவர்கள் தொடர்பாக எடுக்கப்படும் நடவடிக்கை யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல் ஏன்?

0422/ ‘10

கௌரவ (அல் ஹாஜ்) ஏ.எச்.எம். அஸ்வர்,— மின்வலு, எரிசக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) 2009 ஆம் ஆண்டின் இறுதியில் கணிப்பிடப்பட்ட மின்விநியோக முறைமையில் ஏற்பட்டுள்ள சேதங்களின் சதவீதம் எவ்வளவு என்பதையும்,

(ii) அவற்றுள் தொழில்நுட்ப தரத்திலான சேதங்களின் சதவீதம் மற்றும் தொழில்நுட்பமல்லாத சேதங்களின் சதவீதம் எவ்வளவு என்பதையும்,

(iii) மேற்படி (i) இலுள்ள பெறுமானத்தை 2008 ஆம் ஆண்டிறுதியின் பெறுமானத்துடன் ஒப்பிட்டுப் பார்க்கும் போது அந்த சதவீதம் குறைந்துள்ளதா அல்லது அதிகரித்துள்ளதா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) முறைமையிலான சேதங்களை குறைப்பதற்காக இதுவரை மேற்கொள்ளப்பட்டுள்ள வெற்றிகரமான நடவடிக்கை என்னவென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், என்?

0241/ ’10

கௌரவ சஜித் பிரேமதாச, — கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) அம்பாந்தோட்டை மாவட்டத்தில் அம்பாந்தோட்டை வலயக் கல்விக் காரியாலயத்திற்குரிய திஸ்ஸமஹராம கோட்டக் கல்விக் காரியாலயத்தினால் நிருவகிக்கப்படும் அரசாங்கப் பாடசாலைகளில் உட்கட்டமைப்பு வசதிகளுக்கும், பொதுவான தேவைகளுக்கும் பற்றாக்குறை நிலவுகிறதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) இப்பாடசாலை முறைமையில் மின்சார வசதியற்ற பாடசாலைகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்,

(ii) அப் பாடசாலைகளின் பெயர்கள் யாவையென்பதையும்,

(iii) மேற்படி பாடசாலை முறைமையில் மின்சார வசதியற்ற ஆசிரியர் விடுதிகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்,

(iv) அவற்றிற்குரிய பாடசாலைகளின் பெயர்கள் யாவையென்பதையும்,

(v) மரத்தளபாடங்களுக்கான தேவை காணப்படும் பாடசாலைகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்,

(vi) அத்தேவைகள் யாவையென்பதையும்,

(vii) விஞ்ஞான கூடங்கள் மற்றும் நூலகங்கள் அற்ற பாடசாலைகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்,

(viii) அப் பாடசாலைகளின் பெயர்கள் யாவையென்பதையும்

அவர் இச்சபைக்குச் சமர்ப்பிப்பாரா?

(இ) (i) மேற்படி தேவைகளைப் பூர்த்திசெய்யத் தேவையான நிதியை அப்பாடசாலை களுக்கு ஒதுக்க நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்,

(ii) அவ்வாறாயின், அது எவ்வளவு காலத்தினுள் நடைபெறுமென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0321/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,—

(அ) (i) கடந்த காலங்களில் நடைபெற்றவற்றைப் பற்றி விசாரிப்பதற்கான மீளிணக்கக் குழு அல்லது ஆணைக்குழு நியமிக்கப்பட்ட திகதியையும்,

(ii) மேற்படி ஆணைக்குழு அல்லது மீளிணக்கக் குழுவின் உறுப்பினர்களது பெயர்களையும்,

(iii) மேற்குறிப்பிடப்பட்ட ஆணைக்குழு அல்லது மீளிணக்கக் குழுவின் அறிக்கை எதிர்பார்க்கப்படும் திகதியையும்,

(iv) இற்றைவரை மேற்படி ஆணைக்குழு அல்லது மீளிணக்கக் குழு நடத்திய அமர்வுகளின் எண்ணிக்கையையும்,

(v) மேற்படி ஆணைக்குழு அல்லது மீளிணக்கக் குழுவின் தொழிற்பாட்டிற்காக ஒதுக்கப்பட்ட பணத்தொகையையும்,

(vi) ஒதுக்கப்பட்ட பணம் போதுமானதா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல். ஏன்?

0370/ '10

கௌரவ அஜித் பி. பெரேரா,— கூட்டுறவு, உள்நாட்டு வர்த்தக அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) பண்டாரகம (பலநோக்கு) கூட்டுறவுச் சங்கத்தில் 2002 ஆம் ஆண்டு தொடக்கம் 2010 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் தலைவர் பதவி வகித்த நபர்களின் பெயர்கள் யாவையென்பதையும்,

(ii) 2002 தொடக்கம் 2010 வரையான ஆண்டுகளில் மேற்படி பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் இலாபங்கள் / நட்டங்கள் தனித்தனியாக எவ்வளவு என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்படி கூட்டுறவுச் சங்கத்தின் பிரதேச செயற்குழுவிற்கான உத்தியோகத்தர் தெரிவு நடத்தப்பட வேண்டிய திகதி யாதென்பதையும்,

(ii) குறித்த திகதியன்று நடதப்படவேண்டிய உத்தியோகத்தர் தெரிவை பிற்போடுவதற்கு உத்தரவு வழங்கப்பட்டுள்ளதென்பதையும்,

(iii) அவ்வாறாயின், பிற்போடப்பட்ட திகதி யாதென்பதையும்,

(iv) மேற்படி உத்தியோகத்தர் தெரிவினை அவ்வாறு பிற்போடுவதற்கான காரணம் யாதென்பதையும்,

(v) மேற்படி உத்தியோகத்தர் தெரிவுக்கான விண்ணப்பங்கள் கோரப்படும் எதிர்வரும் திகதி யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) கடந்த 3 ஆண்டு காலத்தினுள் குறித்த சங்கத்தில் இடம்பெற்றுள்ள மோசடிகள் அல்லது ஊழல் நடவடிக்கைகள் தொடர்பாக அறிவிக்கப் பட்டுள்ளதா என்பதையும்,

(ii) அவ்வாறாயின், அவற்றுடன் தொடர்புடைய நபர்களின் பெயர்கள் யாவையென்பதையும்,

(iii) மேற்படி மோசடிகள்/ஊழல்களின் அளவு தனித்தனியாக எவ்வளவென்பதையும்,

(iv) இவர்களுக்கெதிராக தற்போது எடுக்கப்பட்டுள்ள சட்ட நடவடிக்கை யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு சமர்ப்பிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0388/10

கௌரவ தயாசிறி ஜயசேகர,— துறைமுகங்கள், விமானச் சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) அம்பாந்தோட்டை துறைமுக நிருமாணக் கருத்திட்டத்தின் புதிய மதிப்பீட்டுத் தொகை எவ்வளவென்பதையும்,

(ii) மேற்படி பணம் கடனாக அல்லது உதவியாக பெற்றுக்கொள்ளப்படுமா என்பதையும்,

(iii) மேற்படி கடனை அல்லது உதவியை பெற்றுத்தரும் நிறுவனங்கள் யாவையென்பதையும்,

(iv) மேற்படி பணத்தொகை கடனாக பெற்றுக்கொள்ளப்படுமாயின் அதனை மீளச் செலுத்தித் தீர்க்கவேண்டிய காலப்பகுதி யாதென்பதையும்,

(v) அதற்கு செலுத்தப்படவேண்டிய வருடாந்த வட்டி வீதம் யாதென்பதையும்,

(vi) மேற்படி கருத்திட்டம் எப்போது நிறைவுபெறும் என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

0423/ '10

கௌரவ (அல் ஹாஜ்) ஏ.எச்.எம். அஸ்வர்,— மின்வலு, எரிசக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) நுரைச்சோலை மின் உற்பத்தி நிலையத்தில் தகனம் செய்வதற்குத் தேவையான நிலக்கரி எந்தெந்த நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படுகின்றன என்பதையும்,

(ii) நிலக்கரி தகனம் மூலம் உற்பத்தியாகும் சாம்பலை மாசடைந்த புகையிலிருந்த நீக்குவதற்கு பயன்படுத்தப்படும் வழிமுறைகள் யாவையென்பதையும்,

(iii) மாசடைந்த புகையில் அடங்கியுள்ள கந்தகம் மற்றும் சல்பேற்றை வெளியேற்றும் பொறிமுறை யாதென்பதையும்,

(iv) மாசகற்றப்பட்ட புகையை வளிமண்டலத்திற்கு விடுவிக்கும் புகைபோக்கியின் உயரம் எத்தனை மீற்றர்களென்பதையும்,

(v) மாசகற்றலின் முடிவின் போது விடுவிக்கப்படும் புகையில் பெணுவதற்கு எதிர்பார்க்கப்படும் ஆக்கக் கூறுகளின் உள்ளடக்கம் யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) வலுச்சக்தி நிலையத்தின் குளிரூட்டல் செயற்பாடுகளுக்கான நீர் எவ்வாறு பெற்றுக்கொள்ளப்படுகின்றதென்பதையும்?

(ii) வலுச்சக்தி நிலையத்தின் உள்ளீர்ப்பு மற்றும் வெளிச்செலுத்துகைகளில் பேணப்படும் நீர் வெப்பநிலை மாற்றம் எத்தனை பாகை செல்சியஸ் என்பதையும்,

(iii) வலுசக்தி நிலையத்திலிருந்து வெளியேற்றப்படும் கொதி நீரானது கடல்வாழ் உயிரினங்கள் மீது ஏற்படுத்தக்கூடிய பாதகமான தாக்கங்கள் யாவை என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், என்?

0242/ '10

கௌரவ சஜித் பிரேமதாச, — கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) அம்பாந்தோட்டை மாவட்டத்தில் அம்பாந்தோட்டை வலயக் கல்விக் காரியாலயத்திற்குரிய லுணுகம்வெஹெர கோட்டக் கல்விக் காரியாலயத்தினால் நிருவகிக்கப்படும் அரசாங்கப் பாடசாலைகளில் உட்கட்டமைப்பு வசதிகளுக்கும், பொதுவான தேவைகளுக்கும் பற்றாக்குறை நிலவுகிறதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) இப்பாடசாலை முறைமையில் மின்சார வசதியற்ற பாடசாலைகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்,

(ii) அப் பாடசாலைகளின் பெயர்கள் யாவையென்பதையும்,

(iii) மேற்படி பாடசாலை முறைமையில் மின்சார வசதியற்ற ஆசிரியர் விடுதிகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்,

(iv) அவற்றிற்குரிய பாடசாலைகளின் பெயர்கள் யாவையென்பதையும்,

(v) மரத்தளபாடங்களுக்கான தேவை காணப்படும் பாடசாலைகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்,

(vi) அத்தேவைகள் யாவையென்பதையும்,

(vii) விஞ்ஞான கூடங்கள் மற்றும் நூலகங்கள் அற்ற பாடசாலைகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்,

(viii)அப் பாடசாலைகளின் பெயர்கள் யாவையென்பதையும்

அவர் இச்சபைக்குச் சமர்ப்பிப்பாரா?

(இ) (i) மேற்படி தேவைகளைப் பூர்த்திசெய்யத் தேவையான நிதியை அப்பாடசாலை களுக்கு ஒதுக்க நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்,

(ii) அவ்வாறாயின், அது எவ்வளவு காலத்தினுள் நடைபெறுமென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0323/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,—

(அ) அரசாங்கம் "மத்தட்ட தித்த" நிகழ்ச்சித் திட்டத்தை அங்கீகரித்த திகதியை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா,

(ஆ) கடந்த பத்து வருடங்களாக இற்றைவரை வருடவாரியாக,

(i) பியர் மற்றும் வன்மதுபானம் ஆகியவற்றின் பாவனையை வெவ்வேறாகவும்,

(ii) இலங்கையில் உற்பத்தி செய்யப்பட்ட பியர் மற்றும் வன்மதுபானம் ஆகியவற்றின் அளவையும்,

(iii) இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்ட பியர் மற்றும் வன்மதுபானம் ஆகியவற்றின் அளவையும்,

(iv) பியர், வன்மதுபானம் ஆகியவற்றின் உள்ளூர் உற்பத்தி மற்றும் இறக்குமதி மீது விதிக்கப்பட்ட சகல விதமான வரிகள் மூலம் அரசாங்கம் பெற்றுக் கொண்ட வருமானத்தையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) கடந்த மூன்று வருடங்களாக கள்ளத்தனமாக சட்டரீதியற்ற முறையில் உற்பத்தி செய்யப்படும் மதுபானத்தின் மதிப்பிடப்பட்ட அளவை வருடவாரியாக அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல். ஏன்?

0424/ ‘10

கௌரவ (அல் ஹாஜ்) ஏ.எச்.எம். அஸ்வர்,— மின்வலு, எரிசக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) தற்போது இயங்குகின்ற, உயிர் எரிபொருள் வலுசக்தி நிலையங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்,

(ii) மேற்படி நிலையங்களின் அமைவிடங்கள் யாவை என்பதையும்,

(iii) மேற்படி வலுசக்தி நிலையங்களினால் உற்பத்தி செய்யப்படும் மொத்த மின் அலகுகளின் எண்ணிக்கை எத்தனை மெகாவோட்டுகள் என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) உயிர் எரிபொருள் வலுசக்தி நிலையங்கள் நகர கழிவுப் பொருள் முகாமைத்துவத்திற்கான தீர்வாக பயன்படுத்தப்படுமா என்பதையும்,

(ii) அவ்வாறாயின், அவ்விடங்கள் யாவை என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், என்?

0440/ ‘10

கௌரவ தயாசிறி ஜயசேகர,— துறைமுகங்கள், விமானச் சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) அம்பாந்தோட்டை துறைமுக கருத்திட்டத்திற்காக பொதுமக்களின் காணிகள் சுவீகரிக்கப்பட்டள்ளனவா என்பதையும்,

(ii) ஆமெனில், அவற்றுக்காக இழப்பீடு வழங்கப்பட்டுள்ளதா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) இக்கருத்திட்டத்தின் கீழ் உருவாக்கப்படும் நேரடி மற்றும் மறைமுக தொழில்வாய்ப்புகளின் எண்ணிக்கை யாதென்பதையும்,

(ii) இதற்காக சுற்றாடல் மதிப்பீட்டு அறிக்கையொன்று பெறப்பட்டுள்ளதா என்பதையும்,

(iii) ஆமெனில், அதை இச்சபைக்கு சமர்ப்பிப்பாரா என்பதையும்

அவர் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

---

## 2010, செத்தெம்பர் 21, செவ்வாய்க்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

0126/ ‘10

கௌரவ சஜித் பிரேமதாச,—பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) அம்பாந்தோட்டை மாவட்டத்தில் தெங்கு அபிவிருத்திச் சபை 6 வலயங்கள் அடிப்படையில் அபிவிருத்திக் கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்துகின்றது என்பதை அவர் அறிவாரா?

(ஆ) இந்த 6 வலயங்களைச் சேர்ந்த உத்தியோகத்தர்கள் 12 பிரதேச செயலாளர் பிரிவுகளுக்கான கடமைகளைச் செய்வதன் மூலம் தெங்கு விவசாயிகளின் தேவைகள் உரியவாறு நிறைவேற்றப்படுகின்றன என அவர் திருப்தியடைகின்றாரா?

(இ) இந்த உத்தியோகத்தர்களை புதன்கிழமைகளில் மாத்திரமே சந்திக்க முடியும் என்பதை அவர் அறிவாரா?

(ஈ) இந்த மாவட்டத்தில் தெங்கு செய்கை கருத்திட்டங்களை முறையாக நடைமுறைப்படுத்துவதற்கு இந்த நிலமை இடையூறாக இருக்கின்றது என்பதை அவர் அறிவாரா?

(உ) இந்த பிரச்சினைகளை தீர்ப்பதற்காக அம்பாந்தோட்டை மாவட்டத்திற்காக தற்போது அனுமதிக்கப்பட்டுள்ள 6 வலயங்களை 10 வலயங்களாக அதிகரிக்க அவர் நடவடிக்கை எடுப்பாரா?

(ஊ) இன்றேல், என்?

0216/ '10

கௌரவ அஜித் குமார,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,—

(அ) (i) கொழும்பு மாவட்டத்தில் காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவிற்கு சொந்தமான காணிகள் உள்ளனவா என்பதையும்,

(ii) ஆமெனில், மேற்படி ஒவ்வொரு காணியினதும் பெயர், அளவு, அமைந்துள்ள கிராம சேவையாளர் பிரிவு, மற்றும் காணியின் இயல்பு யாதென்பதையும்,

(iii) மேற்படி ஒவ்வொரு காணியினதும் வருடாந்த வருமானம் எவ்வளவென்பதையும்,

(iv) மேற்படி காணிகளின் உரிமை சட்டபூர்வமாக ஆட்களுக்கு அல்லது நிறுவனங்களுக்கு கையளிக்கப்பட்டுள்ளதா என்பதையும்,

(v) ஆமெனில், மேற்படி காணிகள் எவ்விடயத்திற்காக எவ்வடிப்படையில் கையளிக்கப்பட்டுள்ளது என்பதையும்,

(vi) காணிகளை பெற்றுக்கொண்ட ஆட்கள் அல்லது நிறுவனங்களின் பெயர், முகவரி, கையளிக்கப்பட்ட திகதி, காணியின் அளவு மற்றும் கால எல்லை யாதென்பதையும்,

(vii) ஒவ்வொரு காணியிலிருந்தும் ஆணைக்குழுவிற்கு கிடைக்கும் வருமானம் யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு சமர்ப்பிப்பாரா?

(ஆ) (i) ஆணைக்குழுவிற்கு சொந்தமான காணிகள் சட்டவிரோதமான முறையில் ஆட்கள் அல்லது நிறுவனங்களினால் அனுபவிக்கப்படுகின்றதா என்பதையும்,

(ii) ஆமெனில், இவர்களின் பெயர், அனுபவித்து வரும் காணியின் அளவு, மற்றும் காலஎல்லை யாதென்பதையும்,

(iii) இது தொடர்பாக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கை மற்றும் இதன் தற்போதைய நிலைமை யாதென்பதையும்,

(iv) ஆரம்பத்திலும் தற்போதும் ஆணைக்குழுவிற்கு சொந்தமான காணியின் அளவு எவ்வளவென்பதையும்,

(v) ஆரம்பத்தில் காணப்பட்ட காணியிலிருந்து கையளிக்கப்பட்ட காணியின் அளவு எவ்வளவென்பதையும்,

(vi) உரிமை கையளிக்கப்பட்டுள்ளவர்களின் பெயர், முகவரி மற்றும் காணியின் அளவு யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

0284/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— நிர்மாண, பொறியியல் சேவைகள், வீடமைப்பு, பொது வசதிகள் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) 1978 தொடக்கம் 1988 வரை, 1989 தொடக்கம் 1994 வரை, 1995 தொடக்கம் 2009 வரை மற்றும் 2010 தொடக்கம் இற்றை வரையுமான காலப்பகுதிகளில் அரசாங்கத்தினால் நிர்மாணிக்கப்பட்ட வீடுகளின் எண்ணிக்கையை வருட மற்றும் மாவட்ட ரீதியாக அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) நிர்மாணிக்கப்படவிருக்கும் வீடுகளின் எண்ணிக்கையை அதிகரிக்க மேற்கொள்ளப்படவிருக்கும் உத்தேச நடவடிக்கைகள் பற்றியும்,

(ii) வீடமைப்பு நோக்கத்திற்கான நிதியிடல் மூலங்களையும், தேவைப்படும் மக்களுக்கிடையில் இந்நிதி எவ்வாறு பகிர்ந்தளிக்கப்படும் என்பது பற்றியும்,

(iii) வீட்டை உடமை கொண்டிருக்கும் சமூகம் ஒன்றை ஊக்குவிப்பதற்கென மேற்கொள்ளப்படவிருக்கும் நடவடிக்ககைள் பற்றியும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0327/ '10

கௌரவ தயாசிறி ஜயசேகர,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) 2008 மற்றும் 2009 ஆம் ஆண்டுகளில் இலங்கை சுங்கத்திணைக்களத்தினால் கைப்பற்றப்பட்டுள்ள சட்டரீதியற்ற பொருட்களுக்காக சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்டுள்ள பரிசுகள் மற்றும் கொடுப்பனவு களின் மொத்தப் பெறுமதி எவ்வளவு என்பதையும்,

(ii) மேற்படி பரிசுகள் மற்றும் கொடுப்பனவுகளை பெற்றுக்கொண்ட உத்தியோகத்தர்கள் யாரென்பதையும்,

(iii) மேற்படி உத்தியோகத்தர்களுக்கு பரிசுகள் மற்றும் கொடுப்பனவுகள் வழங்குவதற்கு காரணமாக அமைந்த சம்பவங்கள் வெவ்வேறாக யாவையென்பதையும்,

(iv) மேற்படி அந்த உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்ட தொகை வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்

அவர் இச்சபையில் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

0355/ '10

கௌரவ அஜித் பி. பெரேரா,— நீதி அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) இலங்கைச் சட்டக் கல்லூரியின் நுழைவுப் பரீட்சைக்கு விண்ணப்பிக்க இயலுமான உச்ச வயது 35 ஆகவிருத்தல் வேண்டுமென ஒழுங்குவிதியொன்று ஆக்கப்பட்டுள்ளதா என்பதையும்,

(ii) அது வர்த்தமானி அறிக்கையில் பிரசுரிக்கப்பட்டிருப்பின் அதன் பிரதியொன்று சபையில் சமர்ப்பிக்கப்படுமா என்பதையும்,

(iii) மேற்படி ஒழுங்குவிதி அங்கீகாரத்தின் நிமித்தம் பாராளுமன்றதத்திற்கு முன்வைக்கப்படும் திகதி யாது என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) அவ்விதம் உச்ச வயதை விதிப்பதற்கான தேவைப்பாடு உள்ளதா என்பதையும்,

(ii) அரசயிலமைப்பின் 12(1) ஆம் உறுப்புரைக்கும் அரச கொள்கைகளை நெறிப்படுத்தும் கோட்பாடுகளின் 27(2) (ஏ) உறுப்புரைக்கும் முரண்பட்டதாக அமையாதா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) கொழும்பு, இலங்கை திறந்த மற்றும் வெளிநாட்டு பல்கலைக்கழகங்களின் சட்டமாணிப் (எல்.எல்.பீ.) பட்டதாரிகளுக்கு, இலங்கை சட்டக் கல்லூரியில் பிரவேசிப்பதற்கான உச்ச வயது விதிக்கப்பட்டுள்ளதா என்பதையும்,

(ii) இன்றோல், சட்டக்கல்லூரி நுழைவுப் பரீட்சை தொடர்பாக மட்டும் வயதெல்லை விதிக்கப்பட்டமைக்கான காரணங்கள் யாவை என்பதையும்

அவர் இச்சபையில் சமர்ப்பிப்பாரா?

(ஈ) (i) மேற்படி சட்டக்கல்லூரிக்கான அனுமதிப்பரீட்சைக்கு விண்ணப்பிப்பதற்கான வயது எல்லை விதிப்பதைத் தவிர்க்குமாறு, சட்டக்கல்வி மன்றக் கட்டளைச் சட்டத்தின் 7(அ) பிரிவிற்கமைய, கட்டளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்,

(ii) அவ்வாறாயின், எப்போது என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(உ) இன்றேல், ஏன்?

0371/ '10

கௌரவ நூர்தீன் மசூர்,— பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) 1990 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 31 ஆம் திகதியளவில் வட மாகாணத்தின் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய நிருவாக மாவட்டங்களைச் சேர்ந்த முஸ்லிம் மக்களின் திருமணப் பதிவுக்காக அப்போதைக்கு நியமிக்கப்பட்டிருந்த, முஸ்லிம் திருமணப் பதிவாளர்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்,

(ii) அவர்களின் பெயர்கள், முகவரிகள் யாவையென்பதையும்,

(iii) முஸ்லிம் திருமண, விவாகரத்துச் சட்டத்தின் கீழ், அந்நியமனங்கள் வழங்கப்பட்ட போது, அவர்கள் பிரதிநிதித்துவப்படுத்திய முஸ்லிம் பிரதேசம் யாதென்பதையும்

மாவட்ட மட்டத்தில் தனித்தனியே அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

0406/ '10

கௌரவ திலங்க சுமதிபால,— நிர்மாணத்துறை, பொறியியல் சேவைகள், வீடமைப்பு, பொது வசதிகள் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) கொழும்பு மாவட்டத்திலுள்ள,

(i) நான்கு பார்ச்சஸிலும் குறைந்த நிலப்பரப்பில் அமைக்கப்பட்டுள்ள குறைந்த வசதிகளைக் கொண்ட வீடுகளின் எண்ணிக்கை யாதென்பதையும்,

(ii) குறைந்த வசதிகளைக் கொண்ட அறுதி பெறப்படாத வீடுகளின் எண்ணிக்கை யாதென்பதையும்,

(iii) அறுதி பெறப்படாத வீடகள் அமைந்துள்ள மொத்த நிலப்பரப்பின் அளவு யாதென்பதையும்,

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) வசதி குறைந்த இவ்வீடுகளை வசதி நிறைந்த வீடுகளாக மாற்ற அவர் மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல்,ஏன்?

0408/ ’10

கௌரவ விக்டர் அன்ரனி,— மின்வலு, எரிசக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) 2004 ஆம் ஆண்டு திசெம்பர் தொடக்கம் 2010 ஆம் ஆண்டு ஏப்பிரல் வரையிலான காலப்பகுதியில் இலங்கையில் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட மின்வலு நிலையங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்,

(ii) இவ்வாறு புதிதாக ஆரம்பிக்கப்பட்ட மின்வலு நிலையங்கள் யாவை என்பதையும்,

(iii) அவை அமைந்துள்ள மாவட்டங்கள் யாவையென்பதையும்,

(iv) இவ்வாறு புதிதாக மின்வலு நிலையங்களை அமைப்பதன் மூலம் தேசிய மின்வலு முறைமைக்கு சேர்ப்பதற்கு எதிர்பார்க்கப்படும் மெகாவோட்களின் எண்ணிக்கை யாதென்பதையும்,

(v) புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ள மின்வலு நிலையங்களுக்கான மதிப்பீட்டுச் செலவினம் ஒவ்வொரு மின்வலு நிலைய அடிப்படையிலும் வெவ்வேறாக யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா ?

(ஆ) இன்றேல், ஏன்?

0410/ ‘10

கௌரவ திலும் அமுனுகம,— பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) 2004 ஆம் ஆண்டில் அரச சேவையிலிருந்த ஊழியர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்,

(ii) 2010 ஆண்டில் அரச சேவையிலுள்ள ஊழியர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்,

(iii) 2004 ஆம் ஆண்டு முதல் இற்றைவரை அரச சேவைக்கு ஆட்சேர்ப்பு செய்யப்பட்டுள்ள ஊழியர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேலும் இந்த ஊழியர்களின் எண்ணிக்கையை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்,

(ii) இவ்வாறு அதிகரிப்பதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கை யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0224/ ‘10

கௌரவ சஜித் பிரேமதாச,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) அம்பாந்தோட்டை மாவட்டத்தில் அம்பந்தோட்டை வலய கல்விக் காரியலத் திற்குட்பட்ட திஸ்ஸமகாராம கோட்டக் கல்விக் காரியாலயத்தினால் பரிபாலிக்கப்படும் அரசாங்கப் பாடசாலைளின் எண்ணிக்கை என்னவென்பதையும்,

(ii) அப்பாடசாலைகளின் பெயர்கள் என்னவென்பதையும்,

(iii) அப்பாடசாலைகளின் இன்றுவரை மூடிவிடப்பட்டுள்ள அல்லது மூடிவிடுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள பாடசாலைகளின் எண்ணிக்கை என்னவென்பதையும்,

(iv) அப்பாடசாலைகளின் பெயர்கள் என்னவென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) (i) இக் கோட்டாக்களில் உள்ளடங்கும் பாடசாலைகளில் மேலதிக ஆசிரியர்கள் உள்ளனரா என்பதையும்,

(ii) அப்பாடசாலைகளின் பெயர்கள் என்னவென்பதையும்,

(iii) ஆசிரியர் பற்றாக்குறை உள்ள பாடசாலைகளின் பெயர் என்னவென்பதையும்,

(iv) பற்றாக்குறை காணப்படுகின்ற பாடகள் என்னவென்பதையும்,

(v) ஆசிரியர் பற்றாக்குறை உள்ள பாடசாலைகளுக்கு ஆசிரியர்களை பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்,

(vi) அவ்வாறெனில், அது எக் கால எல்லைக்குள் என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0315/ 10

கௌரவ ரவி கருணாநாயக்க,— பொருளாதார அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) கொழும்பில் 'ஐபா' நிகழ்ச்சியினை நடத்துவதற்கு இலங்கை இணங்கிய திகதியினையும்,

(ii) நிகழ்விற்கு நிதி வழங்கிய தரப்பினையும்,

(iii) பணம் பெறப்பட்ட திகதியினையும்,

(iv) மேலேயுள்ளவாறு பணம் செலுத்தப்படாவிட்டால், செலவினை ஏற்றுக் கொண்டவர் யார் என்பதனையும்,

(v) நிகழ்ச்சிக்கான மொத்தச் செலவினையும்

அவர் இச்சபைக்கு அறியத் தருவாரா?

(ஆ) (i) 'ஐபா' நிகழ்ச்சியினால் கிடைக்கும் என எதிர்பார்க்கப்பட்ட நன்மைகளையும்,

(ii) அவ்வாறான நன்மைகள் கிடைக்குமா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0328/ '10

கௌரவ தயாசிறி ஜயசேகர,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,—

(அ) (i) ஜனாதிபதி சட்டத்தரணியாக நியமனம் பெறுவதற்கான தகைமைகள் யாவை என்பதையும்,

(ii) மேற்படி நியமனங்களை வழங்குவதற்கு அதிகாரமுள்ள நபர் அல்லது நபார்கள் யாவிர் என்பதையும்,

(iii) ஒரு வருடத்துக்குள் நியமிக்க இயலுமாயுள்ள ஜனாதிபதி சட்டத்தரணிகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்,

(iv) 1994 முதல் இற்றைவரை நியமிக்கப்பட்டுள்ள ஜனாதிபதி சட்டத்தரணிகளின் பெயர்கள் மற்றும் வயது யாவையென்பதையும்

அவர் இச்சபையில் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

0357/ '10

கௌரவ அஜித் பி. பெரேரா,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) பாணந்துறை ஆதார வைத்தியசாலையில் காணப்படும்,

(i) வாட்டுகளின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்,

(ii) நோயாளர்களுக்கான கட்டில்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்,

(iii) சத்திரசிகிச்சைக் கூடங்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) 2010 மே மாதம் ஏற்பட்ட மழை காரணமாக சத்திரசிகிச்சைக் கூடம் உட்பட, இரண்டு வாட்டுகள் தவிர்ந்த ஏனைய அனைத்து வாட்டுகளும் நீரில் மூழ்கியதென்பதையும்,

(ii) இந்தப் பாரதூரமான நிலைமை கடந்த சில வருடங்களினுள் ஒரு வருடத்திற்கு பல தடவைகள் நடைபெற்றதென்பதையும்,

(iii) மேற்படி நிலைமையினைத் தடுப்பதற்கு உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதையும்

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(இ) (i) அவ்வாறாயின் இது தொடர்பில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்,

(ii) எவ்வளவு காலத்திற்குள் மேற்படி நடவடிக்கைகளைப் பூர்த்திசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0225/ '10

கௌரவ சஜித் பிரேமதாச,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) அம்பாந்தோட்டை மாவட்டத்தில் அம்பந்தோட்டை வலய கல்விக் காரியலத் திற்குட்பட்ட லுனுகம்வெஹெர கோட்டக் கல்விக் காரியாலயத்தினால் பரிபாலிக்கப்படும் அரசாங்கப் பாடசாலைகளின் எண்ணிக்கை என்ன என்பதையும்,

(ii) அப்பாடசாலைகளின் பெயர்கள் என்னவென்பதையும்,

(iii) அப்பாடசாலைகளின் இன்றுவரை மூடிவிடப்பட்டுள்ள அல்லது மூடிவிடுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள பாடசாலைகளின் எண்ணிக்கை என்னவென்பதையும்,

(iv) அப்பாடசாலைகளின் பெயர்கள் என்னவென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(அ) (i) இக் கோட்டாக்களில் உள்ளடங்கும் பாடசாலைகளில் மேலதிக ஆசிரியர்கள் உள்ளனரா என்பதையும்,

(ii) அப்பாடசாலைகளின் பெயர்கள் என்னவென்பதையும்,

(iii) ஆசிரியர் பற்றாக்குறை உள்ள பாடசாலைகளின் பெயர் என்னவென்பதையும்,

(iv) பற்றாக்குறை காணப்படுகின்ற பாடங்கள் என்னவென்பதையும்,

(v) ஆசிரியர் பற்றாக்குறை உள்ள பாடசாலைகளுக்கு ஆசிரியர்களை பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்,

(vi) அவ்வாறெனில், அது எக்கால எல்லைக்குள் என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0344/10

கௌரவ தயாசிறி ஜயசேகர,— பொருளாதார அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) குருநாகல் மாவட்டத்தின் ஒவ்வொரு பிரதேச செயலாளர் பிரிவிலும் 2005 ஆம் ஆண்டு தொடக்கம் 2009 ஆம் ஆண்டு வரை ஒவ்வொரு வருடமும் ஜூன் மாதம் 30 ஆம் திகதியளவில் உரித்துடையவர்களாகவிருந்த சமுர்த்தி பயனாளிகளின் எண்ணிக்கை தனித்தனியே எவ்வளவென்பதை அறிவிப்பாரா?

(ஆ) (i) 2005 ஆம் ஆண்டு தொடக்கம் 2009 ஆம் ஆண்டு வரை குருநாகல் மாவட்டத்தின் ஒவ்வொரு பிரதேச செயலாளர் பிரிவிலும் சமுர்த்தி பயனாளிகளுக்காக வருடாந்தம் ஒதுக்கிய நிதி தனித்தனியே எவ்வளவென்பதையும்,

(ii) 2005 ஆம் ஆண்டு தொடக்கம் 2009 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் பண்டுவஸ்நுவர கிழக்கு மற்றும் மேற்கு ஆகிய பிரதேச செயலாளர் பிரிவில் சமுர்த்தி பயனாளிகளாக இருந்து நீக்கப்பட்டவர்களின் பெயர், முகவரிகள் யாவையென்பதையும்,

(iii) அவர்கள் நீக்கப்பட்டதற்கான அடிப்படை என்னவென்பதையும்,

(vi) அப்பிரதேச செயாலளர் பிரிவு இரண்டிலும் சமுர்த்தி பயனாளிகளாக புதிதாக சேர்க்கப்பட்டவர்களின் பெயர், முகவரிகள் யாவை என்பதையும்

அவர் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

---

## 2010, செத்தெம்பர் 23, வியாழக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

0046/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— பிரதம அமைச்சரும் பௌத்தசாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,—

(அ) (i) நாட்டில் பதிவு செய்யப்பட்டுள்ள மத ஸ்தாபனங்கள் எத்தனை என்பதையும்,

(ii) மாவட்ட அடிப்படையில் பௌத்த கோயில்கள், கிறிஸ்த்தவ ஆலயங்கள், ஹிந்துக் கோயில்கள் மற்றும் முஸ்லிம் பள்ளிவாசல்களின் எண்ணிக்கையை வெவ்வேறாகவும்,

(iii) ஒவ்வோர் மதங்களுக்கும் உரித்தான, பதிவு செய்யப்பட்ட குருமார்களின் எண்ணிக்கையினையும்,

(iv) மேலே (i), (ii), (iii) இன் அடிப்படையில் ஸ்தாபனங்கள் மற்றும் ஆட்களின் பெயர் மற்றும் முகவரிகளையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) மேலே கூறப்பட்ட ஸ்தாபனங்களுக்கு கடந்த 05 வருடங்களுக்குமாக, வருடாந்த அடிப்படையில் வழங்கப்பட்ட பணத்தின் தொகையினை அவர் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

0053/ '10

கௌரவ ராஜீவ விஜேசிங்க,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) அரச சார்பற்ற நிறுவனங்கள் மற்றும் பாராளுமன்ற சட்டம் மூலம் கூட்டிணைக்கப்பட்டு சமூக சேவைகளில் ஈடுபட்டுள்ள நிறுவனங்கள் ஆகியவற்றுக்கு கிடைக்கின்ற வெளிநாட்டு நிதிகளை கண்காணிப்பதற்கு தற்பொதுள்ள பொறிமுறைகள் என்ன என்பதையும்,

(ii) கம்பனிகள் பதிவாளரிடம் பதிவு செய்து சமூக சேவைகள் அல்லது ஆய்வுப் பணிகள் அல்லது பரிந்துரைகளில் ஈடுபட்டுள்ள கம்பனிகளுக்கு கிடைக்கின்ற வெளிநாட்டு நிதிகளை கண்காணிப்பதற்கு தற்போதுள்ள பொறிமுறைகள் என்ன என்பதையும்,

(iii) அவ்விதமான கம்பனிகள் தேவைப்படுத்தப்பட்டவாறு தமது அறிக்கைகளை சமர்ப்பிக்கின்றனவா, வரி தொடர்பான கோவைகளைப் பேணுகின்றனவா, அவற்றிற்கு கிடைக்கின்ற வருமானம் தொடர்பில் செலுத்த வேண்டியுள்ள வரிகளை செலுத்துகின்றனவா என்பதையும்

அவர் இச்சபையில் தெரிவிப்பாரா?

(ஆ) (i) 1999 முதல் 2010 வரையிலான காலப்பகுதியில் இனக் கற்கைகளுக்கான சர்வதேச நிலையத்திற்கு வெளிநாட்டு மூலங்களிலிருந்து கிடைக்கப்பெற்ற நிதி எவ்வளவு என்பதையும், இந்நிதிகள் என்ன நோக்கத்திற்காக பயன்படுத்தப்பட்டன என்பதையும்,

(ii) அந்நிதிகளைப் பெற்றுக் கொண்ட நோக்கத்திற்கு வெளிநாட்டு வளங்கள் திணைக்களம் ஒப்புதல் அளித்ததா என்பதையும், மற்றும்

(iii) இந்நிதி பயன்படுத்தப்படும் முறை தொடர்பாக ஏதாவது அரசாங்க முகவரினால் கண்காணிக்கப்பட்டதா என்பதையும்

அவர் தெரிவிப்பாரா?

(இ) இன்றேல், என்?

0082/ '10

கௌரவ சஜித் பிரேமதாச,— நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) இற்றைக்கு ஓராண்டுக்கு முன்னர் நிர்மாணிக்கப்பட்ட அம்பாந்தோட்டை மாவட்டத்தின் பெலிஅத்த பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட மாலிகாதென்ன கிராம உத்தியோகத்தர் பிரிவின் தாறப்பேலியகந்த, உடுகல்மொடே வீதியின் 200 மீற்றர் தூரம் தற்போது முழுமையாக சேதமடைந்துள்ளதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி வீதியை அபிவிருத்தி செய்வதற்காக ஒதுக்கப்பட்டிருந்த நிதி எவ்வளவு என்பதையும்,

(ii) நிர்மாணப்ப பணிகளுக்காக நிதி விடுவிக்கும் போது உரிய நியமங்களுக்கமைய பணிகள் நிறைவு செய்யப்பட்டுள்ளமைக்கான விதப்புரைகள் தொழில்நுட்ப உத்தியோகத்தர்களிடமிருந்து பெறப்பட்டுள்ளதா என்பதையும்,

(iii) மேற்படி வீதியை நிர்மாணிப்பதற்கான பணக் கொடுப்பனவுகளின் போது வேறு எந்த நிறுவனங்களிடமிருந்து விதப்புரைகள் பெறப்பட்டுள்ளதா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) மேற்படி வீதி நிர்மாணிப்பு தொடர்பாக முறையான விசாரணையொன்றை நடத்துவதற்கும் அவ்வீதியை சீரான நிலைக்கு கொண்டுவருவதற்கும் அவர் நடவடிக்கை எடுப்பாரா?

(ஈ) இன்றேல், என்?

0214/ '10

கௌரவ அஜித் குமார,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,—

(அ) (i) காலி மாவட்டத்தில் காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவிற்கு சொந்தமான காணிகள் உள்ளனவா என்பதையும்,

(ii) ஆமெனில், மேற்படி ஒவ்வொரு காணியினதும் பெயர், அளவு, அமைந்துள்ள கிராம சேவையாளர் பிரிவு, மற்றும் காணியின் இயல்பு யாதென்பதையும்,

(iii) மேற்படி ஒவ்வொரு காணியினதும் வருடாந்த வருமானம் எவ்வளவு என்பதையும்,

(iv) மேற்படி காணிகளின் உரிமை சட்டபூர்வமாக ஆட்களுக்கு அல்லது நிறுவனங்களுக்கு கையளிக்கப்பட்டுள்ளதா என்பதையும்,

(v) ஆமெனில், மேற்படி காணிகள் எவ்விடயத்திற்காக எவ்வடிப்படையில் கையளிக்கப்பட்டுள்ளது என்பதையும்,

(vi) காணிகளை பெற்றுக்கொண்ட ஆட்கள் அல்லது நிறுவனங்களின் பெயர், முகவரி, கையளிக்கப்பட்ட திகதி, காணியின் அளவு மற்றும் கால எல்லை யாதென்பதையும்,

(vii) ஒவ்வொரு காணியிலிருந்தும் ஆணைக்குழுவிற்கு கிடைக்கும் வருமானம் யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு சமர்ப்பிப்பாரா?

(ஆ) (i) ஆணைக்குழுவிற்கு சொந்தமான காணிகள் சட்டவிரோதமான முறையில் ஆட்கள் அல்லது நிறுவனங்களினால் அனுபவிக்கப்படுகின்றதா என்பதையும்,

(ii) ஆமெனில், இவர்களின் பெயர், அனுபவித்து வரும் காணியின் அளவு, மற்றும் காலஎல்லை யாதென்பதையும்,

(iii) இது தொடர்பாக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கை மற்றும் இதன் தற்போதைய நிலைமை யாதென்பதையும்,

(iv) ஆரம்பத்திலும் தற்போதும் ஆணைக்குழுவிற்கு சொந்தமான காணியின் அளவு எவ்வளவென்பதையும்,

(v) ஆரம்பத்தில் காணப்பட்ட காணியிலிருந்து கையளிக்கப்பட்ட காணியின் அளவு எவ்வளவென்பதையும்,

(vi) உரிமை கையளிக்கப்பட்டுள்ளவர்களின் பெயர், முகவரி மற்றும் காணியின் அளவு யாதென்பதையும்,

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல்,ஏன்?

0277/ '10

கௌரவ ஆர். யோகராஜன்,— இளைஞர் விவகார அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) வெளிநாட்டு வேலை வாய்ப்பு, வெளிநாட்டு வேலை வாய்ப்புக்கான தொழில் வழிகாட்டல் மற்றும் புலம்பெயர் தொழிலாளர்களின் நலனோம்புகை போன்ற விடயங்கள் வர்த்தமானியில் இளைஞர் விவகார அமைச்சின் கீழ் பிரசுரிக்கப்பட்டுள்ளதையும்,

(ii) மேலே குறிப்பிடப்பட்டுள்ள செயற்பாடுகளைக் கையாளும் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் வெளிவிவகார அமைச்சின் கீழ் வரும் ஒரு நிறுவனமாகப் பட்டியலிடப்பட்டுள்ளதையும்

அவர் அறிவாரா?

(ஆ) இந்த நிறுவனம் இன்றி, அமைச்சினால்,

(i) வெளிநாட்டு வேலை வாய்ப்புச் செயற்பாடுகளைப் போதிய அளவிற்குக் கையாள முடியுமா என்பதையும்,

(ii) வெளிநாட்டு வேலை வாய்ப்பிற்கான தொழில் வழிகாட்டல் செயற்பாட்டினை போதிய அளவிற்கு நிறைவேற்ற முயுமா என்பதையும்,

(iii) புலம்பெயர் தொழிலாளர்களின் நலனோம்புகையினைப் போதிய அளவிற்குக் கவனிக்க முடியுமா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல் , இதற்கான ஆலோசனைகளைச் சமர்ப்பிப்பாரா?

(ஈ) இன்றேல் ஏன்?

0294/ '10

கௌரவ சுனில் ஹந்துன்னெத்தி,— போக்கு வரத்து அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) 1991.08.25 ஆந் திகதி இ.போ.ச. மக்கள் மயப்படுத்தப்பட்டதன் பின்னர் 2002 ஆம் ஆண்டு வரை ஓய்வு பெற்ற ஊழியர்களுக்கு முதல் நியமனத் திகதி தொடக்கம் பணிக்கொடை செலுத்துவதற்கு இ.போ.ச. கடமைப்பட்டுள்ளது என்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) (i) முதல் நியமனத் திகதி தொடக்கம் அவர்களுக்குப் பணிக் கொடை செலுத்த முடியாமலிருப்பதாகக் கூறி இ.போ.ச. நீதிமன்ற தீர்ப்பொன்றை கோரியிருந்ததா என்பதையும்,

(ii) அந்த நீதிமன்றத் தீர்ப்பு என்னவென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) தொழில் ஆணையாளரினால் அந்த ஓய்வு பெற்றோருக்கு பணிக்கொடை செலுத்துமாறு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளதா என்பதையும்,

(ii) அவ்வாறெனின், ஓய்வு பெற்ற ஊழியர்கள் எத்தனை பேருக்கு என்பதையும்,

(iii) செலுத்தவிருக்கும் மொத்த தொகை எவ்வளவு என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) (i) அந்த ஓய்வு பெற்றோருக்கு பணிக்கொடை செலுத்த நடவடிக்கை எடுக்கப்படாமல் இருப்பதற்கான காரணம் என்ன என்பதையும்,

(ii) அந்தப் பணத்தைத் துரிதமாகச் செலுத்த எடுக்கப்படும் நடவடிக்கைகள் என்ன என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(உ) இன்றேல், ஏன்?

0347/ '10

கௌரவ மொஹமட் அஸ்லம்,— நிர்மாண, பொறியியல் சேவைகள், வீடமைப்பு, பொது வசதிகள் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) களுத்துறை மாவட்டத்தின், பண்டாரகம பிரதேச சபை ஆளுகைப் பிரதேசத்தில் அமைந்துள்ள குடிசை வீடுகளின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்,

(ii) அந்த ஒவ்வொரு வீட்டினதும் உரிமையாளரின்/வதியும் குடும்பத் தலைவரின் பெயர், முகவரி யாதென்பதையும்,

(iii) மேற்படி வீடுகளில் வதியும் உப குடும்பங்களின் தலைவர்களது பெயர், முகவரி யாதென்பதையும், ஒவ்வொரு கிராம உத்தியோகத்தர் பிரிவு மட்டத்தில்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், என்?

0354/ ‘10

கௌரவ அஜித் பி. பெரேரா,— நீதி அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) (276 ஆம் அத்தியாயமான) சட்டக் கல்வி மன்றக் கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் இலங்கையில் சட்டக் கல்லூரி நடவடிக்கைகளுக்கு ஏற்புடைய ஒழுங்கு விதிகளை விதிக்க முடியுமென்பதையும்,

(ii) சட்டத்தின் 7(1) வாசகத்தின் பிரகாரம், ஒழுங்கு விதிகளை விதிக்க நீதி அமைச்சரின் அனுமதி அவசியமென்பதையும்,

(iii) சட்டத்தின் 7(2) வாசகத்தின் பிரகாரம், ஒழுங்கு விதிகளை வர்த்தமானியில் வெளியிட்ட பின்னர் துரிதகதியில் “அங்கீகரித்துக்” கொள்ள பாராளுமன்றத் திற்குச் சமர்ப்பிக்க வேண்டுமென்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) சட்டக்கல்வி மன்றங்களுக்கு கொள்கை ரீதியான விடயங்கள் தொடர்பாக எழுத்துமூலமான உத்தரவுகளைப் பிறப்பிக்க நீதி அமைச்சரொருவருக்கு அச்சட்டத்தின் 7(அ) வாசகத்தின் பிரகாரம் தத்துவம் அளிக்கப்பட்டுள்ளதுதென்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா?

(இ) அவ்வாறாயின், அத்தத்துவத்தை பொருத்தமான சந்தர்ப்பமொன்றில் நடைமுறைப் படுத்த அவர் நடவடிக்கை எடுப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0124/ ‘10

கௌரவ சஜித் பிரேமதாச,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) அம்பாந்தோட்டை மாவட்டத்தில் தற்போது செயற்படும் வைத்தியசாலைகளின் மொத்த எண்ணிக்கை எவ்வளவென்பதையும்,

(ii) அந்த ஒவ்வொரு வைத்தியசாலைக்காக அனுமதிக்கப்பட்ட பணியாட் தொகுதியில் இருக்க வேண்டிய மருத்துவர்கள், தாதிமார்கள், பராமரிப்பு உத்தியோகத்தர்கள், சிற்றூழியர்கள் மற்றும் ஏனைய தரங்களைச் சேர்ந்த உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்,

(iii) தற்போது அந்த வைத்திசாலைகளில் பணிபுரியும் ஒவ்வொரு பதவிகளுக்குமான ஊழியார்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்,

(iv) அந்த வைத்தியசாலைகளில் பணியாட் தொகுதியில் வெற்றிடங்கள் இருப்பின் அவற்றை நிரப்ப நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்,

(v) அவ்வாறெனின், அதற்கு எவ்வளவு காலம் எடுக்கும் என்பதையும்

(vi) அந்த வைத்தியசாலைகளில் மேலதிக ஊழியர்கள் இருப்பின் அவர்கள் எந்தெந்த பணிகளில் ஈடுபடுத்தப்படுகின்றார்கள் என்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) கிராமப்புறங்களில் நோயளர்கள் ஏறத்தாள 10 மைல்கள் தூரம் கடந்து வைத்தியசாலைக்கு வருகின்றார்கள் என்பதை அவர் அறிவாரா?

(இ) கிராமப் புறங்களில் சுகாதார நிலைமையை மேம்படுத்தும் பொருட்டு நடமாடும் சுகாதார சேவைகளை ஆரம்பிக்க அவர் நடவடிக்கை எடுப்பாரா?

(ஈ) அதன் மூலம் கிராமப் புறங்களில் சுகாதார நிலமையை மேம்படுத்த முடியும் என்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா?

(உ) இன்றேல், என்?

0215/ '10

கௌரவ அஜித் குமார,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,—

(அ) (i) மாத்தறை மாவட்டத்தில் காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவிற்கு சொந்தமான காணிகள் உள்ளனவா என்பதையும்,

(ii) ஆமெனில், மேற்படி ஒவ்வொரு காணியினதும் பெயர், அளவு, அமைந்துள்ள கிராம சேவையாளர் பிரிவு, மற்றும் காணியின் இயல்பு யாதென்பதையும்,

(iii) மேற்படி ஒவ்வொரு காணியினதும் வருடாந்த வருமானம் எவ்வளவு என்பதையும்,

(iv) மேற்படி காணிகளின் உரிமை சட்டபூர்வமாக ஆட்களுக்கு அல்லது நிறுவனங்களுக்கு கையளிக்கப்பட்டுள்ளதா என்பதையும்,

(v) ஆமெனில், மேற்படி காணிகள் எவ்விடயத்திற்காக எவ்வடிப்படையில் கையளிக்கப்பட்டுள்ளது என்பதையும்,

(vi) காணிகளை பெற்றுக்கொண்ட ஆட்கள் அல்லது நிறுவனங்களின் பெயர், முகவரி, கையளிக்கப்பட்ட திகதி, காணியின் அளவு மற்றும் கால எல்லை யாதென்பதையும்,

(vii) ஒவ்வொரு காணியிலிருந்தும் ஆணைக்குழுவிற்கு கிடைக்கும் வருமானம் யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு சமர்ப்பிப்பாரா?

(ஆ) (i) ஆணைக்குழுவிற்கு சொந்தமான காணிகள் சட்டவிரோதமான முறையில் ஆட்கள் அல்லது நிறுவனங்களினால் அனுபவிக்கப்படுகின்றதா என்பதையும்,

(ii) ஆமெனில், இவர்களின் பெயர், அனுபவித்து வரும் காணியின் அளவு, மற்றும் காலஎல்லை யாதென்பதையும்,

(iii) இது தொடர்பாக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கை மற்றும் இதன் தற்போதைய நிலைமை யாதென்பதையும்,

(iv) ஆரம்பத்திலும் தற்போதும் ஆணைக்குழுவிற்கு சொந்தமான காணியின் அளவு எவ்வளவென்பதையும்,

(v) ஆரம்பத்தில் காணப்பட்ட காணியிலிருந்து கையளிக்கப்பட்ட காணியின் அளவு எவ்வளவென்பதையும்,

(vi) உரிமை கையளிக்கப்பட்டுள்ளவர்களின் பெயர், முகவரி மற்றும் காணியின் அளவு யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

0274/ '10

கௌரவ ராஜீவ விஜேசிங்க,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,—

(அ) மாற்றுக் கொள்கைக்கான நிலையிடம் என்று அழைக்கப்படும் ஒரு நிறுவனத்தை அவர் அறிவாரா?

(ஆ) (i) வெளிநாட்டு நிதியளிப்பினால் இந்நிறுவனம் நன்மையடைந்துள்ளதா என்பதையும்,

(ii) அவ்வாறாயின், கடந்த தசாப்தத்தின் ஒவ்வொரு ஆண்டிலும் பெற்றுக் கொண்ட தொகை எவ்வளவு என்பதையும்,

(iii) பெற்றுக்கொண்ட மேற்படி வெளிநாட்டு நிதியங்கள், வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தால் அங்கீகரிக்கப்பட்டதா என்பதையும்,

(iv) 2008 மற்றும் 2009 ஆம் ஆண்டுகளில் வெளிநாட்டு நிதிகளினால் ஈடு செய்யப்பட்ட மாற்றுக்கொள்கைக்கான நிலயத்தினதும் அதன் துணை நிறுவனங்களினதும் வரவு செலவுத்திட்ட விகிதத்தையும்

அவர் சபையில் குறிப்பிடுவாரா?

(இ) (i) இந்த நிறுவனமோ அல்லது அதன் எவரேனும் பணியாளர்களோ இலங்கையில் வரி செலுத்தும் பொறுப்புடையோராய் உள்ளனரா என்பதையும்,

(ii) அவ்வாறாயின் அவர்கள் தம் பொறுப்பைப் பூர்த்தி செய்துள்ளனரா என்பதையும்,

(iii) இந்த நிறுவனத்தின் பணிப்பாளர்கள் மற்றும் ஏனைய சிரேஷ்ட அதிகாரிகளால் பெற்றுக்கொள்ளப்பட்ட சம்பளம் மற்றும் ஏனைய நன்மைகள் எவ்வளவு என்பதையும்,

(iv) இவை தொடர்பாக வரி செலுத்தப்பட்டுள்ளதா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) மாற்றுக் கொள்கை நிலையத்தால் அமைக்கப்பட்ட துணை நிறுவனங்களின் பெயர்களையும், அவ்வற்றுக்கு எவ்வாறு நிதியீட்டம் செய்யப்பட்டது என்பதையும் அவர் குறிப்பிடுவாரா?

(உ) இன்றேல் ஏன்?

0281/ '10

கௌரவ ஆர். யோகராஜன்,— பொருளாதார அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) சிங்கள மொழியறிவு இல்லாத பொதுமக்கள், அரச நிறுவனங்களில் அலுவல்களை நிறைவேற்றிக் கொள்வதற்கு உதவுமுகமாக 500 உதவி புரிபவர்கள் பெருந்தோட்டப் பகுதிகளில் நியமிக்கப்பட்டனர் என்பதையும்,

(ii) அவ்வாறான அனுசரணையாளர்களுள் 250 இற்கும் அதிகமானோர் ஆசிரிய பதவிகள் போன்ற வேறு பதவிகளை பெறும் பொருட்டு தமது தொழில்களை விட்டு விலகிச் சென்றுள்ளனர் என்பதையும்,

(iii) இவ்வெற்றிடங்களை நிரப்புமுகமாக விண்ணப்பங்கள் கோரப்பட்ட போதும் இற்றை வரை அவை நிரப்பப்படவில்லை என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) இவ்வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதையும்,

(ii) அவ்வாறாயின், மேற்படி வெற்றிடங்கள் எக்கால வரையறையினுள் நிரப்பப்படும் என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

0348/ '10

கௌரவ மொஹமட் அஸ்லம்,— நிர்மாண, பொறியியல் சேவைகள், வீடமைப்பு, பொது வசதிகள் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) களுத்துறை மாவட்டத்தின், பாணந்துறை பிரதேசசபை ஆளுகைப் பிரதேசத்தில் அமைந்துள்ள குடிசை வீடுகளின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்,

(ii) அந்த ஒவ்வொரு வீட்டினதும் உரிமையாளரின்/வதியும் குடும்பத் தலைவரின் பெயர், முகவரி யாதென்பதையும்,

(iii) மேற்படி வீடுகளில் வதியும் உப குடும்பங்களின் தலைவர்களது பெயர், முகவரி யாதென்பதையும்

ஒவ்வொரு கிராம உத்தியோகத்தர் பிரிவு மட்டத்தில் அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், என்?

0125/ '10

கௌரவ சஜித் பிரேமதாச,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) அம்பாந்தோட்டை மாவட்டத்தில் பிரதேச சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவல்கள் ஊடாக தற்போது இடம்பெறும் சேவைகள் தொடர்பாக அவர் திருப்தியடைகின்றாரா?

(ஆ) (i) அந்த மாவட்டத்தில் பிரதேச சுகாதார சேவைகள் பிரிவு அடிப்படையில் தற்போதுள்ள குடும்ப சுகாதார சேவைகள் பிரிவுகளின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்,

(ii) அவைகள் யாவை என்பதையும்,

(iii) அங்கீகரிக்கப்பட்ட குடும்ப சுகாதார சேவைகள் உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்,

(iv) தற்போது சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ள குடும்ப சுகாதார சேவை உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) (i) 2010 ஆம் ஆண்டில் இதுவரை குடும்ப சுகாதார சேவை சிகிச்சைகளில் கலந்து கொண்ட கர்ப்பிணித் தாய்மார்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்,

(ii) அவர்களுக்கு மாதாந்தம் போசாக்கு பொதிகள் வழங்கப்பட்டுள்ளனவா என்பதையும்,

(iii) அவற்றின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்,

(iv) போசாக்கு பொதிகளில் வழங்கப்பட்டுள்ள பொருட்கள் எவை என்பதையும்,

(v) அந்த கர்ப்பிணித் தாய்மார்களுக்கு தேவையான சிகிச்சைகள் உரியவாறு வழங்கப்பட்டுள்ளனவா என்பதையும்,

(vi) அந்த கர்ப்பிணித் தாய்மார்கள் மாதமொன்றினுள் எத்தனை தடவைகள் பரிசோதனைகளுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர் என்பதையும்,

(vii) பரிசோதிக்கப்பட்ட தாய்மார்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், என்?

0275/ '10

கௌரவ ராஜீவ விஜேசிங்க,— புனர்வாழ்வளிப்பு, சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) தற்போது நீதித்துறை கட்டுப்பாட்டில் வைக்கப்படடிருக்கும் 25 வயதிற்குக் கீழ்ப்பட்டவர்களின் எண்ணிக்கை யாதென்பதையும் இது தற்போது நீதித்துறை கட்டுப்பாட்டில் வைக்கப்பட்டிருக்கும் சகலருள்ளும் எத்தனை பங்கு என்பதையும் அவர் கூறுவாரா?

(ஆ) 25 வயதிற்குக் கீழ்ப்பட்ட, குற்றமிழைத்ததாகச் சந்தேகிக்கப்படும் நபர்கள் தொடர்பான தற்போதைய தடுப்பு மறியலில் வைக்கும் மற்றும் தண்டனை வழங்கும் கொள்கையானது, தற்போதைய சமுகத் தேவைகளுக்கும் தண்டிப்பதை விட, புனருத்தாரனத்தைப் பின்பற்ற வேண்டிய தேவைக்கும் அமைவாக உள்ளதா என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) 25 வயதிற்குக் கீழ்ப்பட்டவர்களை தடுப்பு மறியலில் வைத்தல் மற்றும் தண்டித்தல் தொடர்பாக தற்போது அமுலிலுள்ள அணுகுமுறைகளிலிருந்து மாறுபட்ட அணுகுமுறைகளை மேற்கொள்ள ஊக்குவிக்கும் நீதிபதிகளுக்கும் ஏனையவர்களுக்குமான நிகழ்ச்சித்திட்டங்களை நீதிபதிகள் பயிற்சி நிறுவகம் நடத்துகின்றதா என்பதையும்,

(ii) இன்றேல், ஏன் அவ்வாறான நிகழ்ச்சித்திட்டங்கள் நடத்தப்படுவதில்லை என்பதையும்,

(iii) இது தொடர்பாக பரிகார நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுமா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?